සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමුවාර අවසාන ඇගයීම
முதலாம் தவணை பரீட்சை - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 09 | විෂයය / பாடம் / Subject | வரலாறு | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | කාලය / காலம் / Time | 2Hour |
|---|---|---|---|---|---|---|---|

## பகுதி – I

- **இலக்கம் 01 முதல் 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. இந்து சமுத்திரத்தில் தமது வர்த்தக பலத்தை அபிவிருத்தி செய்ய, ஒல்லாந்தர் தமது வர்த்தக நிலையத்தை எங்கு அமைத்தனர்?

    1. பத்தேவியா 2. கோவா 3. மதுரை 4. கல்கத்தா

02. குண்டசாலை குமாரயா என பிரசித்தமடைந்த கண்டிய அரசன் யார்?

    1. இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன்
    2. ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க மன்னன்
    3. இரண்டாம் இராஜசிங்க மன்னன்
    4. முதலாம் விமலதர்மசூரிய மன்னன்

03. கி.பி 1766 இல் ஒல்லாந்தருக்கு சாதகமான கருத்துக்களைக் கொண்ட உடன்படிக்கையை கண்டிய மன்னனுடன் கைச்சாத்திட்ட ஆளுநர்,

    1. பரன் வென் 2. வில்லியம் பலெக் 3. fபன் ஏங்கல் பெக் 4. ஜெராட் ஹல்ப்

04. கி.பி 1762இல் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்க மன்னனை சந்திக்க வந்த ஆங்கிலேயர்,

    1. ஜொரிஸ் வேன் ஸ்பில்பர்க்
    2. கலன் அல்பஸ்
    3. ஜோன் பைபஸ்
    4. ஜோன் டொயிலி

05. ஒல்லாந்து ஆட்சியாளரால் இலங்கை சமூகத்திற்கும் கலாசாரத்திற்கும் ஏற்பட்ட தாக்கமல்லாதது,

    1. நீதிமன்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
    2. புரட்டஸ்தாந்து மதம் கொண்டு வரப்பட்டமை.
    3. தூண்கள், உயரமான கூரைகள் கொண்ட வீடுகள் அமைத்தமை.
    4. பைலா கபிரிஞ்ஞா சங்கீதம் இந்நாட்டு கலைகளுள் ஒன்றிணைந்தமை.



kalvi.lk

06. போர்த்துக்கெயரை இந்நாட்டிலிருந்து விரட்டும்போது இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட ஏதுவான முக்கிய காரணமாவது,

1. போர்த்துக்கேயரின் கீழ் காணப்பட்ட பல பிரதேசங்களை கண்டியுடன் இணைத்துக் கொண்டமை.
2. கொழும்பு கோட்டையை மிகவும் பலம் வாய்ந்த தலைமையகமாக மாற்றிக் கொண்டமை.
3. ஒல்லாந்தர் தமக்கு சாதகமான பிரதேசங்களில் கோட்டைகளைக் கைப்பற்றி, பின் கி.பி 1638ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி மன்னனுக்கு கையளிக்காமை.
4. கோட்டைகளில் உள்ள சேவகர்களுக்கு பணிக்கூலி அளிக்க மன்னன் மறுத்தமை.

07. ஒல்லாந்தர் தமக்குக் கீழ் காணப்பட்ட பிரதேசங்களிலிருந்து உச்சபட்ச பொருளாதார இலாபம அடைய எண்ணி பயிரிட்ட பயிர் எது?

1. கறுவா 2. கோப்பி 3. தேயிலை 4. இறப்பர்

08. இலங்கையின் கரையோர பிரதேசங்களில் கி.பி 1798 – 1802 இற்கு இடையில் காணப்பட்ட ஆட்சிமுறை எப்பெயரால் அழைக்கப்பட்டது?

1. மதுரை ஆட்சி 2. இரட்டை ஆட்சி
3. முடிக்குரிய ஆட்சி 4. வர்த்தக சங்க ஆட்சி

09. இலங்கயின் கரையோரப் பிரதேசங்களின் முதலாவது பிரித்தானிய ஆளுநர்,

1. ரொபர்ட் பிரெளன்ரிக் 2. தோமஸ் மெயிட்லண்ட் 3. டொரிங்டன் 4. பிரட்ரிக் நோர்த்

10. ஸ்ரீ விக்ரம இராஜசிங்க மன்னனது நடவடிக்கைகளுக்கு எதிராக சபரகமுவாவில் கிளர்ச்சியை ஏற்படுத்திய பிரதானியின் பெயர் யாது?

1. எஹலபொல அதிகாரம் 2. பிலிமதலாவே அதிகாரம்
3. மொல்லிகொட அதிகாரம் 4. கெப்பட்டிபொல அதிகாரம்

11. கண்டிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன் ஆங்கிலேய கொடியை ஏற்றுதலுக்கு எதிராக செயற்பட்ட பௌத்த பிக்கு யார்?

1. கடஹபொல தேரர் 2. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர்
3. வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர் 4. பரணகல தேரர்

12. கி.பி 1803 இல் கண்டி நகரைக் கைப்பற்றிய ஆங்கிலேயரால் கண்டிய மன்னனாக அறிவிக்கப்பட்ட இளவரசன் யார்?

1. இளவரசன் முத்துசாமி 2. இளவரசன் கண்ணசாமி
3. மகா அஸ்தான இளவரசன் 4. டிக்கிரி இளவரசன்



kalvi.lk

13. கி.பி 1848 இல் சுதந்திர போருக்கு ஏதுவான வரிகளை மட்டும் உள்ளடக்கிய விடை,

1. நாய்வரி- உப்பு வரி
2. நாய் வரி – துப்பாக்கி வரி
3. கடை வரி – புகையிலை வரி
4. முத்திரை வரி – மீ வரி

14. கி.பி 1848 இல் "ஸ்ரீ விக்ரம சர்வசித்தி" என தம்புல்லையில் மகுடம் சூட்டப்பட்ட தலைவர் யார்?

1. வீர புரன் அப்பு
2. துரைசாமி
3. மடுல்கல்ல திசாவை
4. கொங்காலே கொட பண்டா

15. குவினின் எனும் ஒருவகை ஔ'தத்தை உற்பத்தி செய்ய இந்நாட்டில் பயிர் செய்யப்பட்ட பயிர்,

1. கொக்கோ
2. கோப்பி
3. கறுவா
4. சிங்கோனா

16. தெங்கு பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாது, ஆராய்ச்சிகளுக்காகவும் பரிசோதனை நிலையத்தை நிறுவிய இடம் எது?

1. லுணுவில
2. தலவாக்கலை
3. பேராதனை
4. கன்னொருவை

17. இந்நாட்டின் விவசாயத்துறையின் அபிவிருத்திக்காக நீர்பாசண திணைக்களத்தை ஆரம்பித் ஆளுநர்,

1. மக்கலம்
2. வில்லியம் கிரகரி
3. வெஸ்ட் றிஜ்வே
4. ஹென்றி வோட்

18. கி.பி சுதந்திர போராட்டத்தின்போது இந்நாட்டில் இருந்த ஆளுநர் யார்?

1. தோமஸ் மெயிட்லண்ட்
2. டொரிங்டன்
3. ரொபர்ட் பிரௌன்ரிக்
4. ஆதர் கோடின்

19. கி.பி 1818, 1848 இல் சுதந்திர போர் ஆரம்பித்த பிரதேசங்களை ஒழுங்கு முறையில் கொண் விடை,

1. தும்பறை – மாத்தளை
2. வெல்லஸ்ஸ- மாத்தளை
3. மாத்தளை – குருணாகல்
4. வெல்லஸ்ஸ – வாரியபொல

20. தேசிய விவசாயத்துறையை வளர்ச்சியடையச் செய்ய உலர் வலயத்தில் விவசாய குடியேற்றத்தை அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்தவர்,

1. திரு.டி.எஸ்.சேனாநாயக்கா
2. ஆளுநர் மக்கலம்
3. ஆளுநர் ஹர்கியுலிஸ் ரொப்டன்
4. திரு.ஜே.ஆர்.ஜயவர்தனா



kalvi.lk

## பகுதி – II

- முதலாம் வினா கட்டாயமானது.
- ஏனைய நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.
- மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

01) (A)



i. இவ்வுருவில் உள்ள மன்னன் யார்?

ii. இவர் ஆட்சி செய்த இராசதானி யுகம் எது?

iii. அரசராவதற்கு முன்னர் இவரது பெயர் யாது?

iv. இம்மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சேவை ஒன்று தருக.

(2x4=8புள்ளிகள்)

(B)



i. இவ்வுருவில் காணப்படும் கட்டடம் எது?

ii. இது எந்நகரில் அமைந்துள்ளது?

iii. இவ்விடத்தில் கைச்சாத்திடப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் எது?

iv. தற்காலத்தில் இதற்கருகில் காணப்படும் வணக்கஸ்தலம் யாது? (2x4=8புள்ளிகள்)

02) i. கண்டி இராச்சியத்துடன் தொடர்புகொண்ட ஒல்லாந்து தூதர்கள் இருவரைப் பெயரிடுக.

(02 புள்ளிகள்)

ii. கி.பி 1638 இல் ஒல்லாந்தருடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் காணப்படும் நிபந்தனைகள் இரண்டினை எழுதுக. (04 புள்ளிகள்)

iii. கி.பி 1638 ஒப்பந்தத்திற்கேட்ப செயற்படும்போது ஒல்லாந்தர் ஆரம்பத்திலிருந்து தந்திரமாக செயற்பட்டுள்ளமையை இரண்டு உதாரணங்களினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

03) i. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.

A- ஒல்லாந்தர் சமயத்தைப் பரப்புவதற்காக ஆரம்பித்த நிறுவனம் எது?

B- ஒல்லாந்தர் ஆட்சியால் இந்நாட்டிற்கு வந்து சேர்ந்த இனத்தவர் யார்? (02 புள்ளிகள்)



kalvi.lk

ii. ஒல்லாந்தர் வரி வசூலிப்பதற்காக உருவாக்கிய ஆவண வகை (தோம்பு) இரண்டைக் குறிப்பிட்டு, அவை எதற்காக வசூலிக்கப்பட்டன என்பதை எழுதுக. (04 புள்ளிகள்)

iii. இந்நாட்டின் பயன்பாட்டிற்கும் வர்த்தகத்திற்கும் பயன்படுத்தக்கூடிய உற்பத்திக்கு மாறாக வருமானம் பெறும் பொருட்டு ஒல்லாந்தர் மேற்கொண்ட நடவடிக்கைகளை இரு காரணிகளினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

04) i. பிரித்தானியரது கவனம் இலங்கையின் மீது திரும்பியமைக்கான காரணங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ii. கி.பி 1797ம் ஆண்டு கரையோர பிரதேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கு ஏதுவான காரணங்கள் இரண்டை எழுதுக. (04 புள்ளிகள்)

iii. கி.பி 1803 இல் ஆங்கிலேயரின் முதலாவது கண்டிய ஆக்கிரமிப்பு தோல்வியடைய ஏதுவான காரணிகள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

05) i. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற நினைக்க ஏதவான காரணிகள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

ii. கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கு தந்திரமான கொள்கைகளை வகுத்த.

A- ஆளுநர்

B- அதற்காக செயற்பட்ட அதிகாரியைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

iii. கி.பி 1815 இல் கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைய ஏதவான காரணிகள் இரண்டைச சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

06) i. கி.பி 1818 சுதந்திரப்போருக்கு ஏதுவான இரு காரணிகளை எழுதுக. (02 புள்ளிகள்)

ii. கி.பி 1818 சுதந்திர போர் தோல்வி அடைந்தமைக்கு ஏதுவான காரணிகள் நான்கினை எழுதுக. (04 புள்ளிகள்)

iii. கி.பி 1848 சுதந்திர போருக்கு கோல்புறூக் சீர்திருத்தம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்பதனை இரு காரணிகளினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

07) i. பின்வரும் A,B யில் தரப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A- இந்நாட்டில் முதன்முதலில் கோப்பித் தோட்டம் ஆரம்பித்தவர்.

B- இந்நாட்டின் தேயிலைச் செய்கை தொடர்பாக பரிசோதனை மேங்கொண்டவர்.(02 புள்ளிகள்)

ii. இந்நாட்டின் தேயிலைச் செய்கையின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii. பிரித்தானியர், விவசாயத்தை அபிவிருத்தி செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**